பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 04 புதன்கிழமை 21.09.2022 கதிர் 207

## மண்வெட்டியால் தாக்கி இரண்டு பேர் கொலை!

### குருநாகலில் கொடூரம்

மண்வெட்டியால் தாக்கி இருவர் படு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடூர சம்பவம் குருநாகல் மாவட்டம், கல்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

16 மற்றும் 67 வயதானவர்களே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர் ☞2

# நில உரிமை கோரி குருந்தூர்மலையில் மக்கள் திரண்டு மாபெரும் போராட்டம்!

### ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் பெருமளவில் குவிப்பு





முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632 ஏக்கர் பூர்வீகக் காணிகளைத் தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும் நீதிமன்ற கட்டளையைப் புறந்தள்ளி பௌத்த கட்டுமானம் மேற்கொள்ளப்படுகின்றமை ☞2

## கலக்கமடையத் தேவையில்லை; உரிய நேரத்தில் குட்டித் தேர்தல்!

### எதிரணிக்குப் பிரதமர் பதில்



உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் அடுத்த மார்ச் மாதம் 20ஆம் திகதி காலாவதியாகும் என்பதால் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ☞2

## டில்லியின் நிலைப்பாட்டை வரவேற்கின்றோம்: ரணிலின் உறுதிமொழியையும் நம்புகின்றோம்

### தமிழரசுக் கட்சி தெரிவிப்பு



ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வில் அரசியல் தீர்வு வழங்க வேண்டும் எனவும், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் எனவும் இலங்கையை வலியுறுத்திய இந்தியாவின் நிலைப்பாட்டை இலங்கைத் தமிழரசுக் கட்சி வரவேற்கின்றது. அதே வேளை, தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ☞2

## இன்று கேகாலையில் கையெழுத்து வேட்டை



பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை இன்று கேகாலைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ☞2

## யாழ். மாவட்டத்தில் போதைப் பாவனை இரட்டிப்பாக உயர்வு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகின்ற பட்சத்தில் இவ்வருடம் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்று யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் ☞3

## போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை!

### தமிழரசு மீண்டும் வலியுறுத்து

இலங்கை அரசு உள்நாட்டுப் பொறிமுறை ஊடாக இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் என்பதை நாம் நம்பவில்லை. தொடர்ந்தும் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் தெரிவித்துள்ளது. உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்த ☞2

## வைக்கோல் பட்டறை நாய் போல் எதிர்க்கட்சித் தலைவரின் செயல்

### சாடுகின்றது 'மொட்டு'க் கட்சி




எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் செயற்பாடுகள், வைக்கோல் பட்டறை நாய் போல்தான் உள்ளது – என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித ☞2

## முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு நேரடி அழுத்தம் கொடுக்கவேண்டும்

### இந்தியாவிடம் சுரேஷ் கோரிக்கை



மாகாண சபைகளுக்கான முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு இலங்கைக்கு இந்தியா நேரடி அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியா அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான தனது கரிசனைகளை வெளியிட்டுள்ளதுடன், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. இதனைச் சுரேஷ் பிரேமச்சந்திரன் வரவேற்று இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

நாம் ஒரு சமஷ்டித் தீர்வுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் அதேசமயம், சட்டபூர்வமாக எமக்குக் கிடைத்திருக்கக் கூடிய அதிகாரங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்று இந்தியா கோருவது ☞2

## சு.கவின் பொறுப்புக்களிலிருந்து 8 எம்.பிக்களை நீக்க நடவடிக்கை

அரசில் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களைக் கட்சியின் அனைத்துப் பதவிகளிலிருந்தும் நீக்குவதற்குக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தத் தீர்மானத்தைக் கடிதம் ஊடாக உரியவர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா ☞2

## கலக்கமடையத்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்ற ரீதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூலவிடைக்கானகேள்விவேளையில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. ஜே.சி. அலவத்துவல எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன மேலும் கூறுகையில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் ஏற்கனவே தகவல்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் இப்போதுசெப்டெம்பர்மாதம்என்பதால் அதற்கு இன்னும் காலம் உண்டு. உரிய காலத்தில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்

தேர்தல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பல பரிந்துரைகள் சட்ட வரைவுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் சட்டம் தொடர்பான சில பரிந்துரைகளை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தற்போது ஆலோசித்து வருகின்றது.

தேர்தல் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் உரிய நடவடிக்கைகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொள்ளும். அதேவேளை உரிய முறைமைகளைப்பின்பற்றிஅதற்கான நடவடிக்கைகள் சட்டப்படி முன்னெடுக்கப்படும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் எதிர்த்தரப்பினர் கலக்கமடையத் தேவையில்லை. உரிய நேரத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் - என்றார்.

## போர்க் குற்றங்களு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, தற்போதைய அணுகுமுறையுடன் செல்வதற்கான அரசின் முன்மொழிவுக்கு தமது கட்சி உடன்படாது எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை, ஐ.நாவின் புதிய பிரேரணை வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள், போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பான தமிழ் மக்களின்எதிர்பார்ப்புகளைநிறைவேற்றாத போதிலும்அதில்சாதகமானவிடயங்கள் உள்ளனஎனவும்மாவைசேனாதிராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

## டில்லியின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசியல் தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வழங்கிய உறுதிமொழியையும் எமது கட்சி வரவேற்கின்றது.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசியல் தீர்வு தொடர்பில் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்கனவே ஜனாதிபதி ரணிலிடம் முன்மொழிவுகளைக் கையளித்துள்ளதால், அவை தொடர்பில் கட்சிகளுடன் பேச்சுகளை ஜனாதிபதி ஆரம்பிக்க முடியும்.

ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்குஅரசியல்தீர்வைவழங்குவதில் எப்போதும் அக்கறை கொண்டிருந்தார். நாடாளுமன்றத்தில் ஆற்றிய தனது முதலாவது கொள்கை விளக்க உரையில் அதிகாரப் பகிர்வை அவர் குறிப்பிட்டுள்ளமை சாதகமான ஒன்று.

ரணில் திறமையானவர் - அனுபவமுள்ளவர் என்ற அடிப்படையில் அவரால் பொருத்தமான அரசியல் தீர்வைக் கொண்டு வருவது சாத்தியமான ஒன்று.

ஜனாதிபதியின் கருத்துக்களுடன் அனைத்துக் கட்சிகளும் உடன்படவில்லை என்றாலும், இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவது தொடர்பான அவரது பரிந்துரைகளுக்குப் பெரும்பான்மையானவர்கள் உடன்படுவார்கள் என நம்புகின்றேன் - என்றார்.

## முழுமையான..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வரவேற்கக்கூடிய ஒரு விடயம். 2022ஆம் வருடத்தின் ஆரம்பகால கட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவை ஒன்றிணைந்து 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற இந்தியா உதவ வேண்டும் என்று கோரியிருந்தோம். அதனை ஏற்றுக்கொண்டு இந்திய அரசும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினூடாக மிகத் தெளிவாக சில விடயங்களைக் கூறியுள்ளது.

13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும். இலங்கை அரசு அது தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. பொருளாதார பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு முன்னேற்றம் காணப்படவேண்டுமாக இருந்தால் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று இந்திய அரசு இலங்கை அரசுக்கு மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது.

அண்டை நாட்டுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில், இலங்கைக்கு இந்தியாவால் பல்வேறுபட்ட உதவிகள் கிடைத்து வருகின்றன. அதேசமயம், இலங்கையில் ஒரு நிரந்தரமான அமைதி, சமாதானம் ஏற்பட வேண்டுமாக இருந்தால், ஈழத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதிலும் இந்தியா கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றது.

எட்டுக் கோடி தமிழ் மக்களை உள்ளடக்கி 130 கோடி மக்களையுக் கொண்ட எமது அண்டைநாடான இந்தியாவை எமது நட்பு சக்தியாக வைத்திருப்பதன் ஊடாகவே, தமிழ் மக்களுக்கு அரசியல் பொருளாதார ரீதியாக ஒரு சிறப்பான எதிர்காலத்தை ஏற்படுத்த முடியும்.

எமது தேசிய இன விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தமில்லாதவர்களும் போராட்டத்தின் உண்மையானதும் முழுமையானதுமான வரலாறு தெரியாதவர்களும், பிராந்திய உலக அரசியலை சரியாகவும் முழுமையாகவும் புரிந்துகொள்ளாதவர்களும் இந்தியாவை குற்றம் சாட்டுவதும் இந்தியா தமிழ் மக்களுக்கு விரோதமாக நடக்கின்றது என்று பேசுவதும் அர்த்தமற்ற, பொறுப்பற்ற, விமத்தனமான குற்றச்சாட்டுகளாகும்.

எமது உரிமைகளை வென்றெடுக்க எமக்குப் பலமான ஒரு சக்தியின் ஆதரவு தேவை. அது எமது அண்டை நாடான இந்தியாவைத் தவிர வேறெதுவுமாக இருக்க முடியாது. இந்தியா தனது பாதுகாப்பின் மீது அதிக கரிசனை கொண்டிருக்கும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியாவின் நலன்களைக் காத்துக்கொண்டு தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்என்பதிலும் இலங்கை அரசுடன் நட்புறவைப் பேண வேண்டும் என்பதிலும் இந்தியா கரிசனையுடன் இருக்கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை அது உருவாகியபோது உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா நேரடியாக இலங்கையுடன் பேசி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஈழத் தமிழர்களின் சார்பாக வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது.

## மண்வெட்டியால்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று பொலிஸார் கூறினர். கொலையை செய்த நபர் நேற்றுக் காலை முதல் மது அருந்திவிட்டு வீட்டிலிருந்த பொருட்களைச் சேதப்படுத்திய நிலையில், மாலையில் மனைவியின் தந்தை மற்றும் அயல் வீட்டில் வசித்த உறவு முறை சிறுவன் ஒருவனுடனும் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரால் மண்வெட்டியால் தாக்கப்பட்ட மனைவியின் தந்தையான 67 வயதான நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

16 வயது உறவு முறை சிறுவன் பலத்த காயமடைந்த நிலையில் கல்கமுவவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் இன்று காலை உயிரிழந்துள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய 42 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## இன்று கேகாலை..........

இரா.சாணக்கியன், சர்வமதத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இதேவேளை, நேற்று குருநாகல் மாவட்டத்தில் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை இடம்பெற்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி நாட்டின் பல பாகங்களிலும் கையெழுத்துத் திரட்டும் ஊர்தி வழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், நாளை காலிமுகத் திடல் பகுதியில் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது

## வைக்கோல்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அபேகுணவர்தன தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் பதவியை ஏற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்த அழைப்பை அவர் ஏற்றிருந்தால் எவ்வித சிரமமும் இன்றி இன்று ஜனாதிபதி ஆகியிருக்கலாம். ஆனால், கிடைத்த வாய்ப்பை அவர் தவறவிட்டுவிட்டார்.

எனவே, சவாலை ஏற்றவருக்கு அவர் வாய்ப்பை வழங்க வேண்டும். அதனைச் செய்யாமல் தற்போது எதிர்ப்பு அரசியலையே நடத்தி வருகின்றார். அதாவது வைக்கோல் பட்டறை நாய் போலவே அவரின் செயற்பாடு அமைந்துள்ளது - என்றார்.

## சு.கவின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 14 எம்.பிக்களில் மஹிந்த அமரவீர, நிமல் ஸ்ரீபால டி சில்வா, லசந்த அழகியவண்ண, சாந்த பண்டார, சுரேன் ராகவன், சாமர சம்பத் தசநாயக்க, ஜகத் புஷ்பகுமார மற்றும் ரஞ்ஜித் சியம்பலாப்பிட்டிய ஆகியோர் அரசுடன் தொடர்புபட்டுள்ளதுடன், அமைச்சுமற்றும்இராஜாங்க அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

## நில உரிமை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்பவற்றைக் கண்டித்து தண்ணிமுறிப்பு மற்றும் குமுழமுனை பகுதி மக்களால் இன்று குருந்தூர்மலையில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குருந்தூர் மலை அடிவாரத்தில் ஒன்றுகூடிய மக்கள், பல பதாதைகளைத் தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து குருந்தூர் மலையின் மேற்பகுதிக்குச் சென்ற மக்கள் அங்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவுநீதிவான்சரவணராஜா கடந்த 19.06.2022 அன்று குருந்தூர்மலைக்கு விஜயம் செய்து, இதற்கு மேல் கட்டுமானப்பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாது எனக் கட்டளை பிறப்பித்திருந்தார். இருப்பினும் தற்போதும் அங்கு நீதிமன்றத்தின் கட்டளையை மீறி பௌத்த கட்டுமானப்பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அங்கு மேலதிக கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுக் காணப்படுவதுடன், அங்கு கட்டுமானத்துக்குப் பயன்படுத்துவதற்குத் தயாரான நிலையில் கலவை செய்யப்பட்ட சீமெந்து மற்றும் கட்டுமானப் பணிகளுக்குரிய பொருட்களும் அங்கு காணப்பட்டன.

அத்தோடு அங்கு மீண்டும் பௌத்த கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பில் ஆர்ப்பாட்டக்காரர்களால் தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதன்போது அங்கு சற்று சலசலப்பும் தோன்றியது.

இந்நிலையில் அங்கு பெருமளவில் ஆயுதங்கள் தாங்கிய பொலிஸார் குவிக்கப்பட்டடதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்துகின்ற வகையில் பொலிஸார் புகைப்படங்களையும் எடுத்தனர்.

பொலிஸாரின் இத்தகைய நடவடிக்கையைக் கண்டித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், குருந்தூர்மலையில் கட்டுமானப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படக்கூடாது என்ற நீதிமன்றக் கட்டளையை நடைமுறைப்படுத்துமாறும் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம்சுகாஷ், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஜோன்சன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலின் லண்டன் கூட்டம்

'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்' என்பார்கள். இது ஒரு யதார்த்தபூர்வமான கருத்து.

நீதிக்குமட்டுமல்ல, நியாயத்துக்கும் இது பொருந்தும்.

ஆனால் நேற்று முன்தினம் பிரிட்டனில் புலம்பெயர் இலங்கையர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் சந்தித்தார், நாட்டில் நிலையான அமைதி, சமாதானம், நல்லிணக்கம், பொருளாதார மேம்பாடு போன்றவை தொடர்பில் உங்கள் பங்களிப்பை வழங்குங்கள் என்று உரிமையோடு கோரினார் என்றெல்லாம் வெளியான செய்திகளில் நியாயபூர்வமான செயற்போக்கு தென்படவில்லை என்றே தோன்றுகின்றது.

ஒரு நியாயபூர்வமான கூட்டமாக அவரது அந்தச் சந்திப்பு அமையவில்லை என்பதுதான் இப்போது வெளியாகும் செய்தி.

மாப்பிள்ளை இல்லாமல் திருமணம் நடத்திய மாதிரி, உண்மையாக அந்தக் கூட்டத்துக்கு வர வேண்டியவர்களுக்கு அழைப்பு விடுக்காமல் புலம்பெயர் இலங்கையர் மத்தியில் ஜனாதிபதி பேச்சு என்று கயிறு விட்டிருக்கின்றார்கள் ஏற்பாட்டாளர்கள் என்பதுதான் இப்போது தெரியவரும் தகவல்.

நாட்டில் நிலையான அமைதி, நிரந்தரமான சமாதானம், நீடித்த நல்லிணக்கம் ஆகியவற்றுடன் பொருளாதார மேம்பாடும் ஏற்பட வேண்டுமானால் அதனை வெற்றிகரமாக ஒப்பேற்றுவதற்கு புலம்பெயர் சமூகத்தில் யாரின் பங்களிப்பு அவசியமோ – அத்தியாவசியமோ – அவர்களைப் புறக்கணித்து, தவிர்த்து, இந்தக் கூட்டத்தை ஏற்பாட்டாளர்கள் ஒழுங்கு செய்திருப்பதைப் பார்க்கும்போது, இந்தக் கூட்டத்தின் ஏற்பாடு – இலக்கு – நோக்கம் – குறித்து சந்தேகம் எழாமல் இல்லை.

யுத்தத்தினாலும், நீடித்த இனப்பிரச்சினையாலும், நாட்டை விட்டு வெளியேறி, பூமிப் பந்தெங்கும் வேரோடும், வேரடி மண்ணோடும் தூக்கி வீசப்பட்ட இலங்கைத் தமிழர்கள் இப்போது அந்தந்த நாடுகளில் வலுவாகக் காலூன்றி, வலிமையான புலம்பெயர் சமூகமாக மேம்பாடு அடைந்திருக்கிறார்கள்.

இலங்கைத் தீவின் வம்சாவளியினரான அவர்களின் பங்களிப்பு நாட்டுக்கு உரிய முறையில் – நம்பிக்கை தரும் விதத்தில் – கிட்டுமானால் இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மிகச்சுலபமாக மீண்டுவிடும்.

அந்தப் புலம்பெயர் சமூகத்தின் நம்பிக்கையை ஈட்டும் விதத்தில் அச்சமூகத்துடன் புதிய ஜனாதிபதியின் ஊடாட்டம் அமையும் என்று பார்த்தால், அதற்கு முரணாக அவரது பிரிட்டன் முயற்சி கட்டவிழ்ந்திருக்கின்றது.

புலம்பெயர் சமூகத்தில் – குறிப்பாக பிரிட்டனில் – முக்கியத்துவம் பெற்ற பிரிட்டன் தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவை போன்ற தமிழர்களின் முக்கிய புலம்பெயர் அமைப்புக்களை புறமொதுக்கியே ஜனாதிபதி கலந்து கொண்ட இந்தக் கூட்டம் நடத்தப்பட்டு இருக்கின்றது.

புலம்பெயர் தமிழர்கள் தமது தாயகத்தில் ஆக்கபூர்வமான ஊடாட்டம் செய்வதில் பிரதான – கணிசமான – பங்களிக்கக்கூடிய அமைப்புகளை புறந்தள்ளினால், புலம்பெயர் சமூகத்துடன் ஜனாதிபதியின் உரையாடல் என்ற திட்டம் முழுமை அடைய முடியாது.

ஜனாதிபதியின் பிரிட்டன் கூட்டம் அதன் அடிப்படை இலக்கிலேயே நழுவி விட்டது என்பதே உண்மையான நிலைமை.

## மரண தண்டனை கைதிக்கு மன்னிப்பு வழங்கலாமாயின் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏன் வழங்கமுடிவதில்லை?

### ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் கேள்வி



எத்தனையோ கொலைக் குற்றவாளிகள், மரண தண்டனைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்க முடியுமாயின் அரசியற் கைதிகளின் விடயத்தில் மாத்திரம் ஏன் பாரபட்சம் காட்டப்படுகின்றது என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

வெலிகடை சிறைச்சாலை அரசியற் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் ஏற்பாட்டில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் வெலிகடை சிறையில் உண்ணாவிரதம் இருந்த அரசியற் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகவும் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்ட அடையாள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் சார்பில் எங்கள் ஆதரவை வழங்கியிருந்தோம்.

இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு தமிழர்கள் மீது வன்மத்தைத் திணிப்பதற் காகவும், அச்சுறுத்தல்களை மேற்கொள் வதற்காகவும் கொண்டுவந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்று முழு இலங்கை மக்களையும் பாதிக்கும் சட்டமாக மாறியுள்ளது.

அன்று தமிழ் மக்கள் இந்தச் சட்டத்தால் அவதியுறும் போது ஏனைய இனத்தவர்கள் கண்டும் காணாதவர்களாய், இன்புற்றும் இருந்தனர். ஆனால் இன்று அவர்களும் இந்தச் சட்டத்தால் சிரமப்படுகின்றனர். அப்போது அவர்கள் செய்தது போல் தமிழ் இனம் செய் யாது. ஏனெனில் இந்தச் சட்டத்தால் ஏற் படுத்தப்பட்ட வடுக்கள் இன்னும் மறையாமல் இருக்கின்றன.

அந்த நிலைமை எவருக்கும் வரக் கூடாது என்று எம்மினம் சிந்திக்குமே தவிர நாங்கள் அவதியுற்றபோது இன்புற்றது போன்று இன்புற மாட்டோம்.

பயங்கரவாதத்தை இல்லாமல் செய்வதற்கு என்று ஒரு மாயையைக் காட்டி கொண்டு வரப்பட்டது இந்தச் சட்டம்.

ஆனால், இன்று பயங்கரவாதமே நாட்டில் இல்லை, பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து முற்றாக அழித்துவிட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கையில் எதற்காக தற்போதும் இந்தச் சட்டம் பிரயோகிக்கப்பட வேண்டும்.

புலிப் பயங்கரவாதப் பூச்சாண்டி காட்டி காட்டி சிங்கள மக்களை ஏமாற்றிய காலம் போய், தற்போது மக்கள் விழிப்படைந்து விட்டார்கள் என்பதற்காக அவர்களை அடக்குவதற்காக இந்தச் சட்டம் தற்போது உபயோகப்படுத்தப்படுகின்றது.

எனவே இன்று தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த மக்களுக்குமே பாதகமாக அமைந்துள்ள இந்தக் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும்.

அத்துடன் அந்தச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு இன்றுவரை பல தமிழ் அரசியற் கைதிகள் எவ்வித விசாரணைகளும் இன்றி சிறைகளிலே வாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அவர்கள் அனைவரின் விடுதலைக்கும் பல உத்தரவாதங்கள் காலாகாலம் கொடுக்கப் பட்டு வருகின்றன. அவை வெறுமனே வாய்ச்சொல்லிலோ அறிக் கையிலோ இல்லாமல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். எத்தனையோ கொலைக் குற்றவாளிகள், மரணதண்டனைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்க முடியுமாயின் அரசியற்கைதிகளின் விடயத்தில் மாத்திரம் ஏன் பாரபட்சம் காட்டப்படுகின்றது.

எனவே இந்த விடயத்தில் சர்வதேசம் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் காலம் கடத்திக்கொண்டு செல்லாமல் இதனை நிவர்த்திக்க வழிவகை செய்ய வேண்டும். – என்று தெரிவித்துள்ளார்.

## வாழைச்சேனையில் வயோதிபர் போதைப்பொருளுடன் கைது



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை ரயில் நிலைய பிரதேசத்தில் வைத்து ஐஸ்போதைப்பொருளுடன் 67 வயதுடைய நபர், நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து சுமார் 37.6 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, கதிரவெளி விடே அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் பிறைந்து ரைச் சேனை பிரதேசத் தைச் சேர்ந்தவர். மேலதிக விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைக்காக வாழைச் சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளார். வாழைச் சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.மாவட்டத்தில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் உயிரிழப்பு தொடர்பிலும், அதனைக் கையாள்வது தொடர்பிலும் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று இடம்பெற்றது. அந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதையநிலையில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகுவதால் உயிரிழப்புக்கள் சம்பவிப்பது அதிகரித்துள்ளது. வெளிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில், யாழ் சிறைச்சாலையில் 10 பெண்கள் உட்பட 491 பேர் போதைப்பொருள் பாவனையாளர்களாக இருந்தனர். இந்த வருடம் 13 பெண்கள் உட்பட 854 பேர் போதைப்பொருள் பாவனையாளர்களாக உள்ளனர்.

இந்த வருடம் இதுவரை 10 பேர் போதைப் பாவனையால் உயிரிழந்துள்ளனர். அத்துடன், குருதிக் குளாய்கள் ஊடாக, நாளங்களூடாக போதைப்பொருளை ஏற்றுகின்றபோதும் இறப்புக்கள் சம்பவித்துள்ளன. இதைவிட 185 பேர் ஹெரோய்ன் பாவனையால் சட்ட மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். சுமார் 300 க்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களிடையே குறித்த போதைப்பொருள் பாவனை அதிகம் காணப்படுவதால் பாடசாலை அதிபர்கள், வலய கல்வி பணிப்பாளர்கள் உள்ளிட்டோர் மாணவர் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் பாடசாலைகள் ஊடாக பல விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, மருத்துவர்கள், சிறைச்சாலை அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத் தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள் உள் ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உக்ரைனின் இரண்டு பகுதிகளை ரஷ்யாவுடன் இணைக்க முயற்சி




## மோதல் மீண்டும் வலுவடைய வாய்ப்பு

உக்ரைனில் உள்ள 2 பகுதிகளை ரஷ்யாவுடன் இணைப்பதற்கான பொது வாக்கெடுப்பை இந்த வார இறுதியில் நடத்துவதற்க்கு கிளர்ச்சிப் படைத் தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

நேட்டோவில் உக்ரைன் இணைவதை எதிர்த்து உக்ரைன் மீது ஆறு மாதங்ளுக்கு மேலாக ரஷ்யா போர் தொடுத்து வருகிறது.

இந்நிலையில், கிழக்கு உக்ரைனில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளைத். தனது நாட்டுடன் இணைக்கும் முயற்சியில் ரஷ்யா தீவிரம் காட்டி வருகிறது.

கிழக்கு உக்ரைனில் உள்ள லுஹான்ஸ்க், டொனெட்ஸ்க் பகுதிகளின் பிரி வினைவாதத் தலைவர்கள், இந்த வார இறுதியில் இந்த பகுதிகளை ரஷ்யாவுடன் இணைப் பதற்கான பொது வாக்கெடுப்பை நடத்த திட்டமிட்டுள்ளனர்.


இந்த வாக்கெடுப்பு வெற்றி அடைந்தால், இந்த 2 பகுதிகளும் ரஷ்யாவுடன் இணைக்கப்படும். ஆனால், மேற்கத்தியநாடுகள் இதை அங்கீகரிக்குமா என்பது கேள்விக்குறிதான்.

சமீப நாள்களாக போரில் ஆதிக்கம் செலுத்தி வரும் உக்ரைன், ரஷ்யா கைப்பற்றிய பெரும் பகுதிகளை மீட்டுள்ளது. மேலும், உக்ரைனின் பதில் தாக்குதலை சமாளிக்க முடியாமல், ரஷ்யா தனது எல்லைவரைபின்வாங்கிஉள்ளதாககூறப்படுகிறது. இந்நிலையில், இந்த வாக்கெடுப்பு நடத்தினால் மீண்டும் மோதல் மேலும் வலுவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 4 நாள்களில் இரண்டரை லட்சம் பேர் இங்கிலாந்து மகாராணிக்கு அஞ்சலி







லண்டன், செப்.21

மறைந்த இங்கிலாந்து ராணி 2 ஆம் எலிசபெத் உடலுக்கு இரண்டரை லட்சம் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர் என அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

மறைந்த இங்கிலாந்துராணி 2 ஆம் எலிசபெத் உடல், 10 நாள் அஞ்சலிக்குப் பின் லண்டனில் உள்ளவெஸ்ட்மின்ஸ்டர் அபேவில் அரச மரியாதையுடன் கணவர் இளவரசர் பிலிப் உடல் அருகே நேற்று முன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது. முன்னதாக அவரது உடல் ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோரல் அரண்மனையில் இருந்து கொண்டு வரப்பட்டு, லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் ஹாலில் பொது மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டு இருந்தது. புதன் கிழமை இரவு முதல் திங்களன்று காலை 6.30 மணி வரை ராணி 2 ஆம் எலிசபெத் உடலுக்கு 24 மணி நேரமும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதற்காக, நாடாளுமன்றத்தில் இருந்து தேம்ஸ் நதியின் தென்கரை, டவர் பிரிட்ஜ் முதல் சவுத்வார்க் பார்க் வரை பொதுமக்களின் வரிசை நீண்டு இருந்ததாகக் கூறப்பட்டது.

இது குறித்து அந்நாட்டின் கலாச்சார துறை அமைச்சர் மிசெல்லே டோனேலான் கூறுகையில், “சுமார் இரண்டரை லட்சம் பேர் நாடாளுமன்றம் வழியாக சென்று அஞ்சலி செலுத்தினர். இது ஊகிக்கப்பட்டஎண்ணிக்கை மட்டும்தான். இந்த எண்ணிக்கை இன்னும் இறுதி செய்யப்பட வில்லை”

என்றார். லண்டனின் மேயர் அலுவலகம் கூறுகையில், “ஹைட் பார்க்கில் 80 ஆயிரம் பேர், சடங்கை பார்க்கும் பகுதியில் 75 ஆயிரம் பேர், ராணியின உடலை எடுத்து செல்லும்போது 60 ஆயிரம் பேர் அஞ்சலி செலுத்தினர்'' எனக் குறிப்பிட்டுள்ளது.

## பட்டினியை ஒழிக்க துபாயில் இலவசச் சாப்பாடு சுடச்சுட ரொட்டி விநியோகிக்கும் இயந்திரங்கள்



துபாய், செப்.21

பசியுடன் ஒருவரும் வாடக் கூடாது என்கின்ற நோக்கில், துபாய் முழுதும் ஆங்காங்கே சூடான ரொட்டியை இலவசமாக அளிக்கும், 'வெண்டிங்' இயந்திரங்களை அந்நாட்டு அரசு நிறுவியுள்ளது. மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்சின் துபாயில், வெளிநாடுகளில் இருந்து வந்து பணி புரிவோர் அதிக எண்ணிக்கையில் வசிக்கின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் கட்டட வேலை, கார் மற்றும் கனரக வாக ஓட்டுனர்கள், 'டெலிவரி' ஊழியர்களாகப் பணியாற்றுகின்றனர்.

குடும்பத்தினருக்கு பணத்தை சேமிப்பதற்காக இவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மூன்றுவேளை சாப்பிடாமல் பட்டினியுடன் நள்களை கழிக்கின்றனர். இந்நிலையை மாற்ற வேண்டும் என, ஐக்கிய அரபு எமிரேட்சின் பிரதமர் ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தோம் கடந்த ஆண்டு தெரிவித்தார்.

இதன் ஒருபகுதியாக, துபாயில் இலவச உணவு அளிக்கும், 'வெண்டிங் மிஷின்' எனப்படும், தானியங்கி இயந்திரங்களை நகரின் பல்வேறு பகுதிகளிலும் அவர் நிறுவியுள்ளார். இந்த உணவு இயந்திரங்கள் கடந்த 17 ஆம் திகதி முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. துபாயின், 'அஸ்வாக்' மளிகை கடைகளின் வாயிலில் இந்த இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதில், அரபி ரொட்டி மற் றும், 'பிங்கர் ரோல்' ஆகிய இரண்டு வகை உணவுகள், சுடச்சட தயாரிக்கப்பட்டு ஒரு நிமிடத்தில் அளிக்கப்படுகின்றன. இந்த இலவச உணவு திட்டத்துக்கு தனிநபர்களும் நன்கொடை அளிக்கலாம் என துபாய் அரச தெரிவித்துள்ளது.







# பாடசாலை மீது இராணுவ ஹெலி தாக்குதல்: ஏழு குழந்தைகள் உள்பட 13 பேர் உயிரிழப்பு

மியன்மார், செப்.21

மியான்மாரில் உள்ள பாடசாலை மீது இராணுவ ஹெலிக்கொப்டர்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதில் ஏழு குழந்தைகள் உள்பட 13 பேர் உயிரிழந்தனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மியான்மார் அருகே லெட் யெட் கோன் என்ற கிராமத்தில் உள்ள ஒரு பாடசாலையை இராணுவத்திற்கு எதிராக போராடி வரும் புரட்சியாளர்கள் பயன்படுத்தி வந்தனர் எனக கூறப்படுகிறது. இதையடுத்து அவர்களை ஒடுக்க இராணுவம் ஹெலிக்கொப்டர்களை அனுப்பி வைத்தது. தொடர்ந்து வான்வழியாகவே பாடசாலை மீது தாக்குதல் நடத் தப்பட்டதில், அங்கிருந்த 7 குழந்தைகள் உள்பட 13 பேர் உயிரிழந்திருக்கின்றனர் எனத் தகவல்கள வெளியாகியுள்ளன. இதையடுத்து கொல்லப்பட்டவர் களின் உடல்களை கைப்பற்றிய இராணுவம், அந்த கிராமத்தில் இருந்து 11 கிலோ மீற்றர் தொலைவுக்கு எடுத்துச் சென்று புதைத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. கடந்த 2020 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியை பிடித்த இராணுவ ஆட்சியாளர்கள் தங்களுக்கு எதிராக போராடும் பொதுமக்களை கொன்று குவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸ் தலைவர் பதவிக்கான போட்டியில் கடைசி நேரத்தில் ராகுல் காந்தி குதிக்கிறார்?



இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கான போட்டியில் கடைசி நேரத்தில் ராகுல் காந்தி களம் இறங்கலாம் என செய்திகள் வெளியாகியுள்ளன. கட்சியின் மூத்த தலைவர்கள், நிர்வாகிகள் இது குறித்து அவசர ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

ராகுல் காந்தியின் பாத யாத்திரை தற்போது கேரளாவில் நடந்து வருகிறது. ராகுல் காந்தி நாளை மறுநாள் டெல்லி செல்ல உள்ளார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சி கடந்த இரண்டு நாடாளுமன்ற தேர்தலில் படுதோல்வியை சந்தித்தது. அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த ராகுல் காந்தி, தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று பதவியை ராஜினாமா செய்தார். அதன்பின்பு கட்சியின் தற்காலிக தலைவராக சோனியா காந்தி இருந்து வருகிறார்.

இதற்கிடையே கட்சியின் மூத்த நிர்வாகிகள், தலைவர்கள் சிலர் கட்சியில் இருந்து ராஜினாமா செய்தனர். மேலும் கட்சிக்கு நிரந்தர தலைவரை தேர்வு செய்ய வேண்டும் எனவும் கருத்து தெரிவித்தனர்.

அதே நேரம் ராகுல் காந்தி கட்சியின் தலைவர் பதவியை ஏற்க வேண்டும் என சிலர் கோரிக்கை விடுத்தனர். இதற்கு ராகுல் காந்தி எந்த கருத்தும் தெரிவிக்காமல் மவுனம் காத்து வந்தார். ராகுல் காந்தியின் மவுனத்தை தொடர்ந்து உட்கட்சி தேர்தலை நடத்தி தலைவரை தேர்வு செய்ய வேண்டும் என மூத்த நிர்வாகிகள் சிலர் கோரிக்கை விடுத்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட காங்கிரஸ் மேலிடம் அக்டோபர் 17 ஆம் திகதி அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேர்தல் நடைபெறும் என அறிவித்தது. 19 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் எனவும் கூறப்பட்டது. இதற்கான வேட்பு மனு தாக்கல் வருகிற 24ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் இந்த அறிவிப்பு வெளியானதும் கேரளாவை சேர்ந்த சசிதரூர் எம்.பி., ராஜஸ்தான் முதல் மந்திரி அசோக் கெலாட் ஆகியோர் தலைவர் தேர்தலில் போட்டியிடுவார்கள் என தகவல்கள் வெளியானது.

தலைவர் பதவிக்கு போட்டி எழுந்ததை தொடர்ந்து தமிழ்நாடு, கேரளா உள்பட பல்வேறு மாநில காங்கிரஸ் கமிட்டி சார்பில் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக ராகுல் காந்தியை நியமிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மான நகல்கள் கட்சியின் தேசிய தலைமைக்கு அனுப்பி வைக்கப் பட்டன.

தலைவர் பதவிக்கு ராகுல் காந்தியை நியமிக்க கோரி மாநில கமிட்டிகள் தீர்மானம் நிறைவேற்றியதை தொடர்ந்து தலைவர் தேர்தலில் ராகுல் காந்தி போட்டி யிட்டால், தலைவர் பதவிக்கான போட்டியில் இருந்து விலகி கொள்வதாக சசிதரூர் திடீரென அறிவித்தார்.

அகில இந்திய தலைவர் பதவிக்கான தேர்தலும், அதற்கான ஏற்பாடுகளும் நடந்து வந்த நிலையில் ராகுல் காந்தி கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையிலான பாதயாத்திரையை நடத்தி வந்தார். இந்த யாத்திரை தற்போது கேரளாவில் நடந்து வருகிறது. இந்த நிலையில் பாதயாத்திரையை ஒரு நாள் நிறுத்திவிட்டு உடனடியாக டெல்லி வருமாறு ராகுல் காந்திக்கு சோனியா அழைப்ப அனுப்பினார். இதையடுத்து நாளை மறுநாள் (23ஆம் திகதி) ராகுல் டெல்லி செல்ல உள்ளார். அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவிக்கான வேட்பு மனு தாக்கல் 24 ஆம் திகதி தொடங்க இருப்பதால், ராகுல் காந்தி தலைவர் பதவிக்கு போட்டியிட உள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது. பல்வேறு மாநிலங்கள் ராகுலை தலைவராக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றி இருப்பதால் அவர்களின் விருப்பப்படி ராகுல் காந்தி தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளலாம் எனவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர்களும் அவசர ஆலோசனையில் இறங்கி உள்ளனர். ராகுல் காந்தி டெல்லி சென்று, சோனியாவை சந்தித்த பின்னரே இது தொடர்பான உண்மை நிலைவரம் தெரியவரும்.

# மோடிக்கு ஐ.நா. அமர்வில் அமெ., பிரான்ஸ் பாராட்டு!



நியூயோர்க்,செப்.21

தற்போது போருக்கான காலம் அல்ல என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினிடம் வலியுறுத்திய பிரதமர் மோடியை, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகியவை பாராட்டு தெரிவித்துள்ளன.

ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு சமீபத்தில் கஜகஸ்தானின் சாமர்கண்ட் நகரில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்ய அதிபர் புடினை பிரதமர் மோடி சந்தித்தார்.

அப்போது இருவரும், உணவு, எரிபொருள் பாதுகாப்பு மற்றும் உரம் தொடர்பாக விவாதித்த போது, புடினிடம் தற்போது போருக்கான காலம் இதுவல்ல என மோடி வலியுறுத்தினார்.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் பிரான்ஸ் அதி பர் இமானுவேல் மேக்ரான் பேசியவை வருமாறு:-

தற்போது போருக்கான காலம் இதுவல்ல என, இந்திய பிரதமர் நரேந்திர மோடி கூறியமை சரியானது. கிழக்கத்திய நாடுகளுக்கு எதிராக மேற்கத்திய நாடுகளை எதிர்ப்பது அல்லது மேற்கத்திய நாடுகளை பழிவாங்குவதற்கான நேரம் அல்ல. இது அனைவரும் கூட்டாக ஒன்றிணைந்து சமத் துவத்தை நிலைநாட்டி, அனைவருக்குமான பொதுவான சவால்களை எதிர்கொள்ள ஒத்துழைக்கும் காலமாகும். அதுதான் உண்மை. - இவ்வாறு அவர் பேசினார்.

அமெரிக்கப் பிரதிநிதி சுல்லிவன் வெளியிட்ட செய்தியில் -

பிரதமர் மோடியின் கூற்று சரியானது மற்றும் நியாயமானது என அவர் நம்பும் கொள்கையின் பேச்சை அமெரிக்கா வரவேற்கிறது. ரஷ்யாவுடன் நீண்ட காலமாக அனைத்து மட்டத்திலும் நட்புறவு வைத்திருக்கும் இந்தியத் தலைமை, போரை முடிப்பதற்கான நேரம் இது என தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் எனக் கூறியுள்ளார்.

போருக்கான காலம் இதுவல்ல என புடினை வலியுறுத்திய பிரதமர் மோடியை ஐக்கிய நாடுகள் சபை மட்டுமின்றி, அமெரிக்காவின் முன்னணி நாளிதழ்களும் பாராட்டியிருந்தன.



# தூங்கிக் கொண்டிருந்தோர் மீது லொறி ஏறியதில் நால்வர் மரணம்

டெல்லி சீமாபுரி பகுதியில் நேற்றிரவு சாலை டிவைடரில் (சாலை யைப் பிரிக்கும் உயர்ந்த கட்டில்) தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது வேகமாக வந்த லாரி மோதியதில் 4 பேர் உயிரிழந்தனர்.

டெல்லி போக்குவரத்துக் கழக பஸ் நிலையம் அருகே அதி காலை 1.51 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்ததனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர்கள் கரீம் (வயது52), சோட் கான் (வயது25), ஷ ஆலம் (வயது38), மற்றும் ராகு (வயது45) என அடையாளம் காணப்பட்டனர். காயமடைந்தவர்களில் மனீஷ் (வயது16), பிரதீப (வயது30) ஆகியோர் அடங்குவர்.

சம்பவம் நடந்தபோது அவர்கள் சாலை டிவைடர் மீது தூங்கிக் கொண்டிருந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து டிரைவர் லாரியுடன் அங்கிருந்து தப்பி சென்றுள்ளார். இதுகுறித்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் விசேட குழுக்கள் அமைத்துக் குற்றவாளிகளைத் தேடி வருகின்றனர்.

# ரயிலின் இருபது பெட்டிகள் ஒரேயடியாகத் தடம் புரண்டன





பாட்னா,செப்.21

தீன் தயாள் உபாத்யாய் சந்திப்பு - காயா ஜங்சன் வழித்தடத்தில் இன்று காலை சரக்கு ரெயில் ஒன்றின் 20 பெட்டிகள் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகின.

பீகாரின் ரோஹ்தாஸ் மாவட்டத்தில் உள்ள குமாவ் ரெயில் நிலையம் அருகே இன்று காலை 6.30 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டது.

இதையடுத்து அங்கு மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

# பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் மட்டக்களப்பில் அபிவிருத்திப் பணிகள்

## பதில் முதல்வர் சத்தியசீலன் விளக்கம்






மட்டக்களப்பு,செப்.21

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் மக்களின் வரிப்பணம் முறையாக மக்களுக்கே சென்றடைய வேண்டும் எனும் நோக்கில் ஊழலற்ற முறையில் நேர்த்தியாக அபிவிருத்திப் பணிகளை மட்டக்களப்பு மாநகர சபை முன்னெடுத்து வருவதாக பதில் முதல்வர் க. சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

எழுச்சி மிகு மாநகரம் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட திராய்மடு இரண்டாம் வட்டாரத்திற்குட்பட்ட பனிச்சையடி 'ஐ' வலய இரண்டாம் குறுக்கு வீதியினை தார் வீதியாக அபிவிருத்தி செய்யும் பணியை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், மாநகர சபையைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது பொறுப்பேற்ற காலம் தொடக்கம் பல்வேறு அபிவிருத்தி பணிகளை வெவ்வேறு திட்டங்களின் ஊடாக செயற்படுத்தி வருகின்றோம். அதன் தொடர்ச்சியாக தற்போது மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் மக்களின் வரிப்பணம் முறையாக மக்களுக்கே சென்றடைய வேண்டும் எனும் நோக்கில் ஊழலற்ற முறையில் நேர்த்தியாக அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகிறோம்.

இதேபோல் எதிர்வரும் காலங்களிலும் மக்கள் பயன் பெறக்கூடிய வகையில் பல்வேறு நலத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

த்திட்டங்களுக்கு ஒத்து ழைப்பை வழங்கிவரும் அனைத்துத் தரப்பினருக்கும் முதல்வர் உள்ளிட்டவர்களின் சார்பில் நன்றிகளை கூறிக் கொள்கிறேன். – எனவும் அவர் மேலும் தெரி வித்தார் மேற்படி வீதியானது மட்டக்களப்பு மாநகர சபையின் 2022ம் ஆண்டுக்கான பாதீட்டு நிதியின் ஊடாக மட்டக்களப்பு மாநகர சபையின் 02 ஆம் வட்டார உறுப்பினர் திருமதி பற்றிமா பால்தசார் அவர்களின் பாதீட்டு முன்மொழிவுக்கு அமைய 2 மில்லியன் ரூபா செலவில் 4 மீற்றர் அகலமும் 220 மீற்றர் நீளமும் கொண்ட வீதியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இந்த அபிவிருத்தி பணிகளை மட்டக்களப்பு மாநகர சபையின் பதில் முதல்வர் கந்தசாமி சத்தியசீலன் மாநகர சபையின் உறுப்பினர்களான திருமதி பற்றிமா பால்தசார், சீ.ஜெயந்திரகுமார், பு.ரூபராஜ், மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் டி.ஜே கிறிஷ்டிராஜ் ஆகியோர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

# கிழக்கு விளையாட்டுப் பேரவையின் செயற்பாடுகள் குறித்து ஆலோசனை





(நூருல் ஹுதா உமர்)

விளையாட்டுத்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண விளையாட்டுப் பேரவை நேற்று முற்பகல் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் கூடிய பாடசாலை மட்டத்தில் அடையாளம் காணும் விளையாட்டு வீரர்களை தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்லும் வரை அவர்களை பாதுகாப்பதற்கான விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னர் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பு அமைப்புகளுக்கு அந்த விளையாட்டு வீரர்களை இடமாற்றம் செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை அமைப்பது தொடர்பிலும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. அந்த திறமையான விளையாட்டு வீரர்கள் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும், அவர்களின் நல்வாழ்வுக்காக மாகாண விளையாட்டு நிதியை நிறுவவும் இதன் போது முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை, மாகாண விளையாட்டுத் திணைக்களத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவுகள் இருந்தால் ஒரு வாரத்திற்குள் நடைமுறைப்படுத்துமாறும் ஆளுநர் அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் துசித பி. வணிக சிங்ஹ, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, மாகாண கல்விச் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ. ஜி. திஸாநாயக்க, மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் உட்பட மாகாண விளையாட்டு சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# நிலைபேறு அபிவிருத்தி இலக்குகள்; தம்பலகாமத்தில் பயிற்சி செயலமர்வு






(ஹஸ்பர்)

நிலைபேறு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பிலான பயிற்சி நெறியொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற இந்தச் செயலமர்வில் வளவாளராக கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். பாயிஸ் கலந்து சிறப்பித்தார்.

இதில் ஐக்கிய நாடுகள் 2030 நிகழ்ச்சி நிரல் திட்டம் மற்றும் 17 குறிக்கோள்களை மையமாக வைத்து விளக்கமளிக்கப்பட்டது. நிலைபேறு அபிவிருத்தி என்றால் என்ன?, நிலைபேறு அபிவிருத்தி உருவாக்கம், மிலேனியம் அபிவிருத்திகுறிக்கோள், இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி, மாகாண நிலைபேறான அபிவிருத்தி உட்பட பல விடயங்கள் இதன் போது தெளிவூட்டப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையின்போது நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான அதன் தாக்கங்கள் எவ்வாறு வலுப்பெற்றுள்ளது என்பது தொடர்பிலும் வளவாளரால் மிக தெளிவாக விளக்கமளிக்கப்பட்டது

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், வெளிக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# நினைவேந்தலை குழப்பும் திட்டமிட்ட சதி நடவடிக்கைக்கு ஒருபோதும் இடமளியோம்!

## ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் பொன்மாஸ்டர் திட்டவட்டம்

'திடீர் நினைவேந்தல் கட்டமைப்புக்கள் மூலம் தியாக தீபத்தின் நினைவேந்தலை குழப்பும் திட்டமிட்ட சதி நடவடிக்கைக்கு ஒருபோதும் இடமளியோம்' என தியாக திலீபனின் ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் முன்னாள் மூத்த போராளி பொன்மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத் திற்கு முன், இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நினைவேந்தல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

இன்று இந்த புனிதமான இடத்தில் தியாக தீபத்தின் நினைவேந்தல் சம்மந்தமாக ஊடக சந்திப்பினை நடத்தும் நிலைக்கு யாழ்.மாநகரசபை எம்மைத் தள்ளியுள்ளது.

ஒரு மெல்லிய நெருப்பிற்குள் நின்றே எமது தியாகச்செம்மல்களின் நினைவேந்தல்களை தற்போதுவரை நடத்திக்கொண்டு வருகின்றோம்.

இன்று முழு நெருப்பிற்குள் நின்று எமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தேசியத் தலைவரின் கீழ் விடுதலைப்புலிகள் அமைப்பில் போராளியாகவிருந்து ஒற்றையாட்சியின் கீழான செயற்பாட்டை எதிர்த்து போராடியே தியாகச் செல்வங்கள் மடிந்தன.

அவர்களின் தியாகங்களை சரியாக வழிநடத்த எம்மாலான செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த அடிப்படையில், கடந்த ஆறு வருடங்களாக தியாக தீபத்தின் நினைவேந்தலை நடத்திவரும் நினைவேந்தல் ஏற்பட்டுக்குழுவோடு எந்தவித கலந்துரையாடலையும் மேற்கொள்ளாது. தியாக தீபத்தின் நினைவேந்தலை குழப்புவதற்கான திட்டமிட்ட சதிமுயற்சியையாழ்.மாநகரசபைமுன்னெடுத்துள்ளது.

ஏற்கனவே செயற்பாட்டிலுள்ள நினைவேந்தல் கட்டமைப்பில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் உறவுகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்தே தியாக தீபத்தின் நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தியாக தீபத்தின் நினைவேந்தலைக் குழப்பி மக்கள் மயப்படுத்தப்பட்டு வரும்போராட்ட உணர்வுகளைமழுங்கடிக்கச்செய்வதே புதிதாக உருவாக்கப்பட்ட திடீர் நினைவேந்தல் கட்டமைப்புக்களின் நோக்கமாகும்.

நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவால் நினைவேந்தல் ஆரம்பித்து ஐந்து நாள்கள் கடந்த நிலையில் இன்று புதிதாக தோன்றும் திடீர் நினைவேந்தல் கட்டமைப்புக்கள் எமது போராட்டத்தின் தியாகங்களுக்கு செய்யும் துரோக நடவடிக்கையாகும்.

விடுதலை உணர்வுகள் மக்கள் மத்தியிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்ற சதித்திட்டத்தை இந்தக் கட்டமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன.

மேலும், கடந்த வெள்ளியன்று மாநகரசபை முதல்வரால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த திடீர் நினைவேந்தல் கட்டமைப்பிற்கான கூட்டத்தில் பங்குபற்றியிருந்த முன்னாள் போராளி செழியன், தியாக தீபத்தின் நினைவேந்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியையும் இராணுவத்தினரையும் கூட இணைத்துக்கொள்வோம் என்றவொரு கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அந்தவேளையில் அங்கு கூடியிருந்த ஒரு முன்னாள் போராளியைத்தவிர வேறு எவருமே அவருடைய கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை.

ஆனால் அந்த போராளியைத் தவிர்த்தே ஏழு பேர் கொண்ட கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது.

இப்படியானவர்கள் தியாக தீபத்தின் நினைவேந்தலை பொறுப்பெடுப்பதென்பது நினைவேந்தலின் புனிதத்தன்மையை மாசுபடுத்துவதாகவே அமையும் என்பதை நான் தெட்டத்தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இதுவரைகாலமும்எந்தவொருகுழப்பங்களுமின்றி நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவால் நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்பட்டே வருகின்றன.

அவ்வாறு ஏதும் குழப்பங்கள் இருந்தால் கூட கடந்த வருடம் நினைவேந்தல் நிறைவுற்று ஒரு வருட காலம் இருந்த நிலையில் அதனை ஏற்பாட்டுக்குழுவிற்கு அறியப்படுத்தியிருக்கலாம். அவ்வாறு எந்தவொரு நடவடிக்கையையும் மேற் கொள்ளாது இன்று இந்த திடீர் கட்டமைப்பை உரு வாக்கியிருப்பதென்பது, மக்களைக் குழப்பத்திற்கு உட்படுத்தி, தியாக வரலாறுகளை மழுங்கடிக்கச்செய்யும் திட்டமிட்ட சதியே என்பது புலனாகின்றது. இந்தத் திடீர் நினைவேந்தல் கட்டமைப்பில் உள் வாங்கப்பட்ட ஒருவர் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட அரசியல் கைதிகளுடைய போராட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தார்.

எனினும் போராட்டக்காரருக்கு போராட்டத்தின் போதும் போராட்டத்துக்குப் பின்னரும் எந்த வழியிலும் அவர்களுக்கான உதவிகளை வழங்காமல் போராட்டத்துக்கே தாமதமாகவே வருகை தந்திருந்தார்.

இந்த சூழ்நிலையில் மேற்படி உறவுகளுக்குத் தேவையான உதவிகளையும் செய்து கொடுத்ததோடு போராட்டத்தில் நாமும் பங்கெடுத்திருந்தோம்.

இவ்வாறாக மக்களை அழைத்து நடுவீதியில் விட்டுச்சென்றவரால் எவ்வாறு இந்த நினைவேந்தலை நேர்த்தியாகச் செய்து விட முடியும். மேலும், குறித்த இந்த திடீர் கட்டமைப்பைச் சார்ந்தவர்கள், தாயகத்தில் எமது மக்கள் சார்ந்து செயற்படுத்த வேண்டிய ஏராளமான விடயங்கள் காணப்படுகின்றது. அவற்றில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என நான் அவர்களுக்குக் கூறிக்கொள்கின்றேன். தியாக தீபத்தின் ஐந்து அம்சக்கோரிக்கைகளுள் ஒன்றான நில ஆக்கிரமிப்பு குருந்தூர் மலையில் சிங்கள பேரினவாதத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனவே இங்கு நினைவேந்தலைக் குழப்பாமல் குருந்தூர் மலைக்குச்சென்று தியாக தீபத்தின் கோரிக்கைகளுக்காகக் குரல் கொடுக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கின்றேன். எது எவ்வாறாயினும் வழமை போலவே தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஏற்கனவே நடை முறையிலுள்ள நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவால் முன்னெடுக்கப்படும் என்பதோடு அதனைக் குழப்பும் வகையில் எந்தத் தரப்பு செயற்பட்டாலும் நாம் அவற்றுக்கெதிராக குரல் எழுப்புவோம். – எனத் தெரிவித்துள்ளார்.

## கல்முனைக் கடற்கரை ஐஸ் வாடியில் இடிந்து விழும் நிலையில் நீர்தாங்கி!



(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கல்முனை ஐஸ் வாடி கடற்கரை பகுதியில் உள்ள நீர்தோங்கி மற்றும் கட்டடச் சிதைவுகள் இடிந்து விழும் நிலையில் உள்ளன அப்பகுதி வாழ் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் மருதமுனை, நற்பிட்டிமுனை, கல்முனை மற்றும் சாய்ந்தமருது பகுதி மீனவர்களுக்கான ஐஸ்கட்டித் தேவைகள் இவ்வாடி ஊடாகவே பூர்த்தி செய்யப்பட்டு வந்தன.

எனினும், இந்த நீர் தாங்கியில் இருந்து தற்போது நீர் விநியோகம் மேற்கொள்ளப்படாத நிலையில், அது பாதுகாப்பற்று முழுமையாகப் பழுதடைந்துள்ளது. ஐஸ் உற்பத்தி நிலையமும் செயலிழந்து காணப்படுகின்றது.

நீர்த்தாங்கியில் காணப்பட்ட பாரிய வெடிப்புகள், அப்பிரதேச மக்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. கட்டமைப்பின் சிறு பகுதிகள் உடைந்து விழுந்துகொண்டிருக்கின்றன.

இதனால் அதன் அருகில் விளையாட்டில் ஈடுபடும் சிறுவர்களும் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

எனவே, இந்நீர்த்தாங்கியை அகற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பில் மூத்த சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்!



சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கந்தரோடையிலுள்ள அமரர் லயன் மகாதேவாவின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் தன்னலமற்ற சேவையாளர்களான மூத்த லயன்ஸ்கள் மூவர் கௌரவிக்கப்பட்டனர்.

சுன்னாகம் லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை உறுப்பினராக இணைந்து இன்றுவரை 32 வருடங்கள் தொடர்ந்தும் கழகத்தில் சேவையாற்றுகின்ற லயன்சேதுவிபுலானந்தா, லயன்ஸ்கழகங்களின் அனைத்து மாவட்டங்களின் முன்னாள் தலைவரும் நீர்கொழும்பு ஹோல்டன் ஸ்ரார் பீச் ஹோட்டலின் நிர்வாக இயக்குநருமாகிய லயன் தேவா டி பீற்றர் அவர்களாலும் –

வைத்தியத் துறையுடன் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின்ஊடாகவும்மக்கள்பணியாற்றுபவரும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலையாக சிறியதாக இருந்த காலத்திலும் பின் தரமுயர்த்தப்பட்டதன் பின்னரும் யுத்த காலங்கள், இடம்பெயர்வுக் காலங்களில் தளர்வுறாமல் நோயாளர்களுக்கு அளப்பெரும் சேவையாற்றி, சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினூடாகத் தனது வைத்திய நண்பர்கள் வட்டத்தை இணைத்து பல மருத்துவ முகாம்களை நடத்தி 28 வருடங்கள் லயன்ஸ் கழகம் ஊடாக மக்கள் சேவையாற்றும் வைத்தியர் லயன் பேரின்பநாயகம், கொமர்சல் வங்கியின் முன்னாள் நிர்வாக இயக்குநரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமாகிய லயன் எஸ்.ரங்கநாதனாலும் –

சுன்னாகம் பிரதேசத்தில் பல்வேறுபட்ட சமூகசேவைகளை ஆற்றி வருபவரும் பல மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திடுபவரும் லயன்ஸ் கழகத்தின் ஊடாக பல்வேறு மக்கள் நலப் பணிகளை 22 வருடங்களாக ஆற்றி வருகின்ற லயன் ந.சண்முகவேல், கொமர்சல் வங்கியின் முன்னாள் நிர்வாக இயக்குநரும் நிறை வேற்றுப் பணிப்பாளருமாகிய லயன் எஸ்.ரங் கநாதனாலும் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.09.2022இல் வெளியிடப்பெற்றது.